# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 17.09.2024 supeedsam.com supeedsam@gmail.com


# தமிழரசுக் கட்சியின் ஆதரவு சஜித்துக்கு




எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க இலங்கை தமிழ் அரசு கட்சி தீர்மானித்துள்ளது.

வவுனியாவில் நேற்றுக் காலை கட்சியின் அரசியல் பிரதிநிதிகளுக்கு இடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சிறீதரன் எம்.பி, மேற்படி தீர்மானத்தில் தனக்கு சிறிதும் உடன்பாடு இல்லை என்று குறிப்பிட்டார்.

எனவே, தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்குமாறு அவர் இதன்போது பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

02 ஆம் பக்கத்தில்...

# தீர்மானத்தை எதிர்க்கின்றேன்!

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை தாம் ஆதரிப்பதாக தமிழரசுக்கட்சி அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், குறித்த தீர்மானத்தை தான் எதிர்ப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இன்றைய கூட்டத்தில் ஐந்து பேர் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் நிலைப்பாட்டில் இருந்தார்கள்.



02 ஆம் பக்கத்தில்...

# அரியநேத்திரனுக்கு தமிழரசு கட்சி தடை



தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்க வேண்டாம் என இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர்

02 ஆம் பக்கத்தில்...

# கருணா அம்மான் கட்சிக்குள் உடைவு;
## கட்சியிலிருந்து வெளியேறினார் ஜெயா சரவணா

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சி ஊழல் நிறைந்தது என கட்சியிலிருந்து வெளியேறிய தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் முன்னாள் உப தலைவரும், அம்மான் படையணியின் தலைவருமான ஜெயா சரவணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசியல் பயணத்தில் முக்கியமான ஒரு முடிவை அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளேன். தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் உப தலைவர்

02 ஆம் பக்கத்தில்...

# தமிழரின் வாக்குகளை சிதறடிப்பதற்காக பேரினவாதம் களமிறக்கியவரே அரியநேத்திரன்

தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் சஜித் பிரேமதாசவுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக முகவர்கள் களமிறக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக மட்டக்களப்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



02 ஆம் பக்கத்தில்...

# அழிந்து போகக்கூடிய ஆபத்தில் கிழக்கு மாகாண தமிழர்கள்



கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழ் மக்கள் 15 ஆண்டுகளில் இருந்த இடம் தெரியாது அழிந்து போகக் கூடிய ஆபத்து இருக்கிறது.

ஆகவே இவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால் தமிழர் தேசம் ஒன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்வு எட்டப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார். தமிழர்களுடைய தலை நகரமான திருகோணமலை தமிழர்களுக்கு சொந்தமான நிலங்கள் முழுவதும் கபளீகரம்

02 ஆம் பக்கத்தில்...

# பொது வேட்பாளரை மகனுடன் சென்று தனியாக சந்தித்த மாவை

## சுமந்திரனுக்கு எதிரான திரைமறைவு நகர்வா?



இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும், அவரது மகனான வலி வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கலையமுதனும் பொது வேட்பாளரை சந்தித்து தமது ஆதரவைத் தெரிவித்துள்ளதாக தகவல வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ் பொது வேட்பாளரின் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குறித்த சந்திப்பில் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸாவின் பிரச்சார கூட்டத்தில் தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர்களான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் பிரசார மேடையில் ஏறி தமது ஆதரவை தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அழிந்து போகக்கூடிய ஆபத்தில் ,,,,

செய்யப்பட்டு, 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 32 விகாரைகள் அமைக்கப்பட்டு மிகப் பெரிய பௌத்த மயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் தேர்தல் புறக்கணிப்பு பிரசாரத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகவும் சஜித் பிரேமதாச எதிர்க்கட்சித் தலைவராகவும் அனுராகுமார திசாநாயக்க வலிமையான ஒரு எதிரணியின் கட்சி தலைவராகவும் பாராளுமன்றத்தில் இருந்து கொண்டிருக்கும் போது தான் இந்த பௌத்தமயமாக்கல் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதேபோல் மட்டக்களப்பு எல்லைப் பகுதியான மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையில் 3 லட்சம் மாடுகள் அழிவுக்கு உள்ளாக்கப்பட்டு 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பேரினவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அபகரிப்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது இவை எல்லாம் நடைபெறுகிறது சஜித்தோ, அனுரவோ, ரணிலோ இதனை தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இன்று அம்பாறை மாவட்டம் முற்றாக பறிபோய்விட்டது அதேபோல் திருகோணமலை மாவட்டமும் கிட்டத்தட்ட மிகப் பெயரளவில் பறிபோய்விட்டது. மட்டக்களப்பு மாவட்டம் பறிபோக தொடங்கிவிட்டது இந்த நிலையில் கிழக்குடன் வடக்கு இணைந்தால் மாத்திரம் தான் கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் வடக்கிலுள்ள தமிழ் மக்களுடன் இணையும்போது தங்களுடைய இருப்பை உறுதி செய்யக் கூடியதாக இருக்கும் என்றார்.

இந்த இணைவு நடைபெறவில்லை என்றால் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் தமிழ் மக்கள் 15 ஆண்டுகளில் இருந்த இடம் தெரியாது அழிந்து போகக் கூடிய ஆபத்து இருக்கிறது.

ஆகவே, இவை எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமாக இருந்தால் இந்த இனவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு தமிழர் தேசம் ஒன்று அங்கீகரிக்கப்பட்ட தீர்வு எட்டப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

### தமிழரின் வாக்குகளை சிதறடிப்பதற்காக

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

இனவாதிகளை தோற்கடிப்பதற்காகவே, சஜித் பிரேமதாசவை ஆதரிக்கிறோம். தமிழ் மொழி பேசும் சிறுபான்மைச் சமூகங்களின் தலைமைகளும் சஜித் பிரேமதாசவையே ஆதரிக்கின்றன.

மலையகக் கட்சிகள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகள் எல்லாம் இனவாதத்தைத் தோற்கடிக்க ஒன்றுபட்டுள்ளன. கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் நடந்த கூட்டங்களில் பங்கேற்றுவிட்டுத்தான் மட்டக்களப்பு கூட்டத்துக்கு வந்தேன். அதிகளவான தமிழ் மக்கள் அக்கூட்டங்களில் பங்கேற்றிருந்தனர். இலங்கை தமிழரசுக் கட்சியும் சஜித் பிரேமதாசவையே ஆதரிக்கிறது. இதனால், அமோகமான தமிழ் வாக்குகள் சஜித்துக்கே கிடைக்கவுள்ளன. இதனை இல்லாமல் செய்வதற்காகவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த அரியநேத்திரனை பேரினவாதம் களமிறக்கியுள்ளது.

நமது இருப்புக்கள், பாதுகாப்பு மற்றும் உரிமைகளை ஒருசில ரூபாக்களுக்காக விற்க முடியுமா? எனவேதான், நிதானமாகச் சிந்திக்குமாறு கோருகிறோம். கடந்த தேர்தலிலும் எமது ஆலோசனைகளைப் புறக்கணித்து, ஒருசிலர் கோட்டாபயவுக்கு ஆதரவளித்தனர். என்ன நடந்தது? நடந்தவற்றை நினைத்துப் பாருங்கள்.

ஐந்து வருடங்களுக்கு ஆட்சியை ஒப்படைக்கப் பொருத்தமானவர் யார்? சிறுபான்மைத் தலைமைகள் எல்லாம் சஜித்தை ஆதரிப்பது ஏன்? எதிர்க்கட்சித் தலைவரான இவரது சேவைகள் நாடு முழுவதும் வியாபித்துள்ளன. இந்த நம்பிக்கையோடுதான் நாம் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

### அரியநேத்திரனுக்கு தமிழரசு கட்சி தடை

சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சஜித் பிரேமதாஸவை ஆதரித்து யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதியில் நேற்று நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மிகச் சொற்ப அளவிலான எண்ணிக்கையானவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்கி அதனை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள்.

எனினும், அவ்வாறான எந்த முயற்சியிலும் தமிழரசு கட்சி ஈடுபடாது என்பதுடன, அதில் எங்களின் எந்த பங்களிப்பும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசு கட்சியின் மத்திய குழு சஜித்தை ஆதரிக்க வேண்டும் என முடிவுசெய்துள்ளது. தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற அபாயத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் எனச் சொன்னோம். எனினும், ''தமிழரசுக் கட்சியை எப்படியும் நாங்கள் வழிக்குக் கொண்டு வருவோம்'' எனச் சொல்லிக் கொண்டிருந்தவர்களுக்கு அது முடியாமல் போனது. அதனால், எங்களுடைய கட்சியில் இருந்தே ஒருவரைப் பிரித்தெடுத்து அவரைத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்னும் நாமம் சூட்டி தேர்தலில் களமிறங்கியுள்ளனர்.

அவருக்கு எதிராக நாங்கள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அவரிடத்தில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. எங்கள் கூட்டங்களுக்கு அவர் வருவதற்கு நாங்கள் தடை விதித்திருக்கின்றோம். அவருடன் இணைந்து பிரசாரத்தில் ஈடுபடும் எங்கள் உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னார் மாவட்ட தேர்தல் கள நிலவரம் தொடர்பாக

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர் -தேர்தல் குறித்து 20 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டடிருப்பாதாக மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கனக சபாபதி கனகேஸ்வரன் .தெரிவித்துள்ளார்

மன்னார் மாவட்டச் செயலகத்தில்(16) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,

எதிர்வரும் 21ஆம் திகதி இடம் பெற உள்ள ஜனாதிபதி தேர்தலின் போது வன்னி தேர்தல் தொகுதி மன்னார் மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம் பெற உள்ளது. எமது நிர்வாக தேவை கருதி குறித்த 98 வாக்களிப்பு நிலையங்களும் 25 வலயங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வலயமும் உதவி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் ஊடாக குறித்த 98 வாக்களிப்பு நிலையங்களும் மேற்பார்வையின் கீழ் செயல்படும்.

மாவட்ட வாக்கு எண்ணும் நிலையமாக மன்னார் மாவட்டச் செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குள் 7 வாக்கு எண்ணும் நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும். அதனூடாக மாவட்டத்தின் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

மன்னார் மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பை பொறுத்தமட்டில் மாவட்டத்தில்



கடமையாற்றுகின்ற 10 ஆயிரத்து 36 உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று வாக்களிப்பு இடம் பெற்றது.

இதில் 9 ஆயிரத்து 945 உத்தியோகத்தர்கள் தபால் மூல வாக்களிப்பை மேற்கொண்டுள்ளனர். 91 பேர் வாக்களிக்கவில்லை. குறித்த விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன .ஜனாதிபதி தேர்தல் குறித்து அனைத்து பயிற்சி வகுப்புக்களும் இடம் பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தை பொறுத்த வரையில் தேர்தல் குறித்து 20 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்து முறைப்பாடுகள் அனைத்தும் வன்முறையுடன் தொடர்பு பட்டதாக இல்லை.

சட்ட ம.மீறலுடன் தொடர்பு பட்ட சாதாரண முறைப்பாடுகளாகவே அவை கிடைக்கப்பெற்றது. அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை சிறப்பான முறையில் நடத்துவதற்கு பொது மக்களை தெளிவுபடுத்தும் வகையில் ஒலி பெருக்கி மூலம் கிராமங்கள் தோறும் தெளிவு படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் வாக்களிக்க தேர்தல் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு விசேட தற்காலிக அடையாள அட்டை வழங்குவதற்கான பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வாக்களிக்க உள்ள விசேட தேவையுடையவர்களுக்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் 2 உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். கண் தெரியாதவர்கள் வாக்களிப்பதில் கடினம் என்பதால் உதவியாளர் ஒருவரை அழைத்துச் சென்று வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வாக்குச்சீட்டின் நீளம் (2- 1/2) இரண்டரை அடி நீளமாக காணப்படுகின்ற மையினால் பொது மக்கள் இலகுவாக தமது வேட்பாளரை தெரிவு செய்வதில் தாமதம் ஏற்படலாம். இதனை கருத்தில் கொண்டு புள்ளி இடும் சிற்றறைகளின் எண்ணிக்கையை வாக்களிப்பு நிலையங்களில் அதிகரித்துள்ளோம். மேலும் மன்னார் மாவட்டத்தில் 127 பிரச்சார நிலையங்கள் அனுமதியுடன் இயங்கி வருகின்றன. மாவட்டத்திற்கு இரண்டு பிரதான அலுவலகங்கள் மாவட்ட அலுவலகங்களாக இயங்கி வருகிறது.

அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பான முறையில் இடம் பெற்று வருகிறது. தேர்தல் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் முறைப்பாட்டு பிரிவு இலக்கமான 023 -2222215 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### கருணா அம்மான் கட்சிக்குள் உடைவு:

பதவியில் இருந்தும் அக்கட்சியின் அடிப்படை உரிமை பதவியில் இருந்தும் கடந்த 17.08.2024 அன்று விடுவித்து கொண்டுள்ளேன்.

அக்கட்சியில் நீண்ட தூரம் என்னால் பயணிக்க முடியாது என்பதனை புரிந்து கொண்டேன். **போரினால் பாதிக்கப்பட்டு தமது அன்றாட வாழ்க்கைக்கு மற்றையவர்களிடம் கையேந்தும் நிலமைக்கு தள்ளப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் பொருளாதாரம், மேம்பாடு அவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது என்பவற்றை கருத்தில் கொண்டு ஆரம்பித்த பயணம் இன்று பல கோடிக்கணக்கான பணத்தை இழந்து நிற்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.**

அங்கே நிதி மோசடிகளும், ஊழல்களும் வீண்விரயங்களும் செய்யப்பட்டு நிதிகள் இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது.

ஊழல் நிறைந்த அக்கட்சியில் இருந்து என்னால்பயணத்தை தொடர முடியாது இருப்பதாலேயே இம் முடிவு எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம்.

நிதிமோசடிக்கு அந்த கட்சியின் தலைவர் கருணா அம்மான் அவர்களும் அவரினை சுற்றியிருக்கும் சமூகவிரோத கும்பல்களும் முழுப்பொறுப்பு கூறவேண்டும் .

ஒரு கட்சியினை எப்படி வழிநடத்த வேண்டும் என தெரியாமல் மிலேச்சத்தனமான போக்கில் செயற்பட்டு கொண்டிருக்கும் போது ஜனநாயக பாதையில் மக்களின் தேவையை, மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு எப்படி உதவுவது என்பதனை புரிந்து கொள்ள தெரியாத நிலையில் ஒருவட்டத்திற்குள் என்னால் செயற்படமுடியாது.

எனக்கு பல பக்கங்களிலும் இருந்து நிறைய அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் வந்து கொண்டு இருக்கின்றன.

இருப்பினும் எனது மக்கள் சேவை அன்பின் இல்லம் அறக்கட்டளை சேவை மூலமும், என்னால் ஆரம்பிக்கப்பட்ட அம்மான் படையணி மூலமும் தொடரும்.

இதுரை நான் எவரிடமும் எனது அன்பின் இல்லத்திற்கோ, அம்மான் படையணிக்கோ ஒரு சதம் கூட கேட்கவும் இல்லை, பெறவும் இல்லை.

முழுநிதியும் என்னுடைய சொந்த உழைப்பில் எனது கையால் செலவிடப்பட்டது. இருப்பினும் எனது பயணத்தினை இடைநிறுத்தி கொள்வேன் என யாரும் கனவு காண வேண்டாம்.

இழப்புகள் என்பது எனக்கு புதிதல்ல, பல துரோகங்களை நான் சந்தித்திருக்கின்றேன். இன்றும் பாரிய துரோகம் முதுகில் குத்தும் செயலை சந்தித்திருக்கின்றேன். செய்தவர்களுக்கு இது ஒன்றும் புதிதல்ல.

என்து அன்பின் இல்லம் அறக்கட்டளை, அம்மான் படையணியுடன் இணைந்து இன்றில் இருந்து எனது சேவையை ஆரம்பிக்கும் . குறிப்பாக வடக்கு கிழக்கில் அது தொடர்ந்த வண்ணமே இருக்கும் என்பதை உறுதிபட கூறுகின்றேன்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எனது இரு அமைப்புக்களும் அதனை சார்ந்த மக்களும் எமது தமிழர் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக சமூதாயத்துடன் இணைந்து ஓட வேண்டும்.

மற்றையபடி விருப்பு வாக்கின்படி ஒரு புதிய ஜனாதிபதியை தெரிவு செய்தால் நன்றாக இருக்கும்.

அதேநேரம் எமது தமிழ் இருப்பை ஒற்றுமையாக காட்ட வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களுடன் சமுதாயத்துடன் இணைந்து பயணிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

### தீர்மானத்தை எதிர்க்கின்றேன்!

அது தொடர்பாக ஒரு அறிக்கையும் எழுதப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிப்பதாகவே இருந்தது.

மத்திய குழுவில் கடந்த முதலாம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் பிழை என நான் எழுத்து மூலமாகவும் வழங்கி இருக்கிறேன். நான் ஒரு தெரிவு செய்யப்பட்ட தலைவர் என்ற ரீதியில் எழுத்து மூலமாக அறிவித்து விட்டு தான் பிரித்தானியா சென்று இருந்தேன். 6 திகதி நான் மீளவும் இலங்கைக்கு திரும்புவேன். ஏழாம் திகதி வரை கூட்டத்தினை வைக்க வேண்டாம் என கூறியிருந்தேன். அவ்வாறு கூட்டங்கள் வைத்தாலும் தீர்மானங்கள் எடுக்கப்படாது என்று பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் எனக்கு உறுதிமொழியையும் தந்திருந்தார்.

தற்போதைய தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராஜாவை 26 ஆம் தேதி சந்தித்து பேசுகின்ற போது நாங்கள் தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றமாட்டோம் சில விடயங்கள் தொடர்பாக பேச இருக்கிறோம் என தெரிவித்திருந்தார்.

இவற்றையெல்லாம் தாண்டி 2024. 8. 18ஆம் திகதி ஆறு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு கூடி தீர்மானம் எடுக்காத நிலையில் மத்திய குழுவில் அவசர அவசரமாக யாருடைய தேவைக்காக யாருடைய தீர்மானத்தை எடுத்தார்கள். சஜித் பிரேமதாசவுக்காக அந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

அந்த தீர்மானம் எடுத்த பின்னர் நான் கடிதம் மூலமாகவும் தெரிவித்திருந்தேன். இதனை நான் எதிர்க்கிறேன். என்னைப் பொருத்தவரை தமிழ் மக்களுடைய தேசிய உணர்வுகளை பிரதிபலிக்க கூடிய வகையில் நாங்கள் ஒரு பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கின்ற ஒரு தெளிவான நிலைப்பாட்டை கொண்டு இருந்தேன். அதனை இப்போதும் கொண்டிருக்கிறேன். இன்றும் இந்தக் கூட்டத்தில் அதனை வலியுறுத்தி என்னுடைய கருத்து இவர்களுடைய தீர்மானத்திற்கு எதிரானது என்பதனை பதிவு செய்யுமாறு தெரிவித்து இருக்கிறேன்.

ஸ்ரீதரன் இதனை ஏற்கவில்லை அதாவது ஸ்ரீதரன் சஜித் பிரேமதாசாவுக்கு மட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்க, அனுரகுமார திசாநாயக்க உட்பட்ட தென்னிலங்கையினுடைய வேட்பாளர்கள் யாருக்கும் ஆதரவு இல்லை என்பதை பதிவு செய்யுமாறு குறிப்பிட்டு அந்த கூட்டத்திலிருந்து என்னுடைய நேரம் முடிந்ததும் புறப்பட்டேன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# சங்குக்கு வாக்களித்து தமிழரின் சங்கையை காப்பாற்றுவோம்!

## மண்டானையில் ஜெயசிறில் முழக்கம்!





(வி.ரி.சகாதேவராஜா)

தமிழர்களாகிய நாம் அனைவரும் சங்குக்கு வாக்களித்து எமது சங்கையை காப்பாற்றுவோம். இவ்வாறு திருக்கோவில் மண்டானைப் பிரதேசத்தில் இடம் பெற்ற பொது வேட்பாளருக்கான பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும், முன்னாள் தவிசாளருமான கலாநிதி கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் பாக்கிய செல்வம் அரியநேத்திரனுக்கு ஆதரவளிக்கும் இந்நிகழ்வு நேற்று மாலை மண்டானைப் பிரதேசத்தில் நடைபெற்றது.

அங்கு பொது வேட்பாளரின் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஜெயசிறில் கூறுகையில் ; வேட்பாளரும் நீங்களே வாக்காளரும் நீங்களே. இது எமது இரத்தம்.

கடந்த எட்டு ஜனாதிபதிக்கு வாக்கு போட்டு தமிழர்கள் கண்ட பலன் என்ன?ஆறு முறை பிரதம மந்திரியாகவிருந்த ரணில் இதுவரைக்கும் தமிழருக்கென்று ஆற்றிய பணி என்ன? திருக்கோவில் பிரதேசத்தை முன்னேற்றுவோம் என்று கூறிப்பலர் வந்தார்கள் . ரணில் அழைத்தார் சென்றேன் என்றுகூறி தந்தையைக் கொன்றவனுடன் கைகோர்த்து நிற்கிற அவலக் காட்சிகளை காண்கிறோம். கோடிக்காக ரணில் சஜித் பின்னால் செல்லும் கூட்டத்தை இன்னும் தமிழர்கள் நம்பலாமா?

இன்று இங்குள்ள ஆஸ்பத்திரி கூட ஆறே ஆறு வைத்தியருடன் பிரதேச வைத்தியசாலை போன்று இயங்கி வருகிறது. இதுதானா இவர்களது அபிவிருத்தி?

இங்கு வெள்ளம் கொரோனா வந்தால் நாங்கள் வருவோம். ஆனால் இன்று வெள்ளை சிவப்பு வாகனங்களில் வருபவர்கள் எப்பொழுதாவது இங்கு வந்தார்களா?

தேர்தலுக்குப் பிறகு இவர்களை உங்களால் காண முடியுமா? இல்லை . ஆனால் அவர்கள் தருவதை வாங்கிக் கொள்ளுங்கள். உங்களது வாக்குகளை சங்குக்கு இடுங்கள். சங்கே முழங்கு. சங்கையை காப்பாற்றுவோம்.

மக்களும் கோசம் எழுப்பி ஆதரவளித்தனர்.

# எமது திருமலை மண்ணை பரித்தவர்களே வாக்கு கேட்கின்றனர்




(ஹஸ்பர் ஏ.எச்)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு கேட்கும் வேட்பாளர்கள் எமது திருமலை மண்ணை பரித்தவர்களே என தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை வெளிக்கடை தியாகிகள் கடற் கரை அருகில் (15) இடம் பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்தும் தெரிவிக்கையில் நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது ரணில், அநுர, சஜீத் போன்றவர்களின் ஆசனத்தை பெறுவதற்கல்ல சமஷ்டி தீர்வு கோரியும் 75 வருட கால பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைத்துமே

திருகோணமலை மண்ணுக்கு பல வரலாறுகள் உண்டு இலங்கைக்கு சுதந்திர தினமன்று சிங்க கொடிக்கு பதிலாக கறுப்பு கொடி ஏற்றிய 22 வயது இளைஞன் நடராசா சுட்டுக் கொல்லப்பட்டார். 1956ல் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாநாடு தந்தை செல்வாவினால் இங்கு தான் நடாத்தப்பட்டது அதன் போது இணைந்த வடகிழக்கின் தலை நகரமாக திருகோணமலையை அறிவித்திருந்தார். அப்போது கூட சமஷ்டியை வலியுறுத்தியே பேசியிருந்தார்.1977க்கு முன்பு பெரும்பான்மை இன பாராளுமன்ற உறுப்பினர் இருக்கவில்லை 1977க்கு பின்பு சேருவில எனும் தொகுதியை உருவாக்கி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் லீலாரத்ன என்னும் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

2009 மே18 ல் நடைபெற்ற போரின் போது நடந்த சம்பவம் பற்றி பல சர்வதேச நாடுகளுடனும் இந்தியாவுடனும் பேசியிருந்தோம் ஒன்றும் நடக்கவில்லை இவ்வாறு ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் தடுத்தவர்களே வெட்கமில்லாமல் வாக்கு கேட்கின்றார்கள் அதற்கு சில தமிழ் தேசியத்தில் உள்ளவர்கள் சோரம் போகின்றார்கள்.அரியநேந்திரனுக்கு அளிக்கும் வாக்குகள் எனக்கல்ல அது உங்களுக்கானது ஒவ்வொரு புள்ளடியும் உங்கள் தலை எழுத்தை தீர்மானிக்கும் .சங்கு சின்னத்துக்கு மாத்திரம் வாக்களியுங்கள் ஏனையவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் .இன்னும் சில நாட்களில் பொய் வதந்திகள் வரலாம் அதனை நம்பி ஏமாற வேண்டாம் .செயற்கை நுண்ணறிவு மூலமாக எனது படத்தை பயன்படுத்தி போலியான பிரச்சாரங்களை முன்வைத்து செயற்படுவார்கள் எதையும் நம்ப வேண்டாம் என்றார்.

# நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு அனுபவமுள்ள ஜனாதிபதி ரணிலே





(ஏறாவூர் நிருபர் நாஸர்)

சீரழிந்து குட்டிச்சுவராகியுள்ள எமது நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அனுபவமுள்ள ஜனாதிபதி ஒருவரே பொருத்தமானவரென அபிவிருத்தி திட்ட அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேர்தல் களத்திலுள்ள சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்க போன்றவர்கள் நாட்டை ஆளக்கூடிய அனுபவமற்றவர்கள் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் அல்ஜுப்ரிய்யா தேர்தல் வட்டாரத்தில் .. சமூக சேவகரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்பாளருமான ரஜாய் நசீர் தலைமையில் ( 15.09.2024 ) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றகையிலேயே அலி ஸாஹிர் மௌலானா இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவை ஆதரித்து இம்மக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. முக்கியஸ்தர்கள் பலர் இங்கு உரையாற்றினர்.

இங்கு அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா மேலும் பேசுகையில்- முன்னணி வேட்பாளர்களான ரணில் விக்ரம சிங்க மற்றும் சஜித் பிரேமதாச போன்றவர்கள் தமது குடும்ப சகிதம் மக்களுக்கு முன்னாள் வருகின்றனர். அதுபோன்று அனுரகுமார திசாநாயக்கவுக்கு காட்சியளிக்க முடியுமா என்பதை நான் சவாலாக விடுகின்றேன்.

எனவே தமது சொந்த குடும்பத்தையே சீராக நிருவகித்துக் கொள்ள முடியாதவரை நம்பி இந்த நாட்டினை எவ்வாறு ஒப்படைக்க முடியும் என்பது சவாலாக உள்ளது. இதனைப் பற்றி எமது இளைஞர் யுவதிகளுக்குத் தெரியாதுள்ளது.

அதேபோன்று ரணில் விக்ரமசிங்கவுடன் பல சிறுபான்மைக்கட்சிகள் அதேபோன்று தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் கூட்டிணைந்துள்ளார்கள். சஜித் பிரேமதாசவுடனும் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் பலர் கூட்டிணைந்து வேலைத்திட்டங்களைச் செய்கின்றார்கள். ஆனால் அனுரகுமாரவுடன் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகள் இல்லாதிருப்பது ஆபத்தானது. தப்பித்தவறி ஆட்சியமைத்தால் அந்த ஆட்சியில் சிறுபான்மைச் சமூகத்திற்கு நடைபெறும் அநீதிகளைத்தட்டிக்கேட்பதற்கு எவருமே இல்லை.

அதேபோல முஸ்லிம் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள முஸ்லிம் காங்கிரசும் அகில இலங்கை மக்கள் காங்கிரசும் சஜித் பிரேமதாசவுடன் இணைந்துள்ளனர். நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு சஜித் பிரேமதாச அணியினர் எதிர்க்கட்சிக்கு வரும்பட்சத்தில் முஸ்லிம் சமூகம் திட்டமிட்டு புறக்கணிக்கப்படலாம். கோட்டாபய ராஜபக்ச காலத்திலும் இவ்வாறு நடைபெற்றமை சிறந்தபாடமாகவுள்ளது. எனவே சீரழிந்த ஓரளவு நாட்டைக்கட்டியெப்பியுள்ள ரணில் விக்ரம சிங்கவை ஆதரித்து எமக்கான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்வோம் என்றார்.

# கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மேய்வல்லுனர் போட்டிகளில் பட்டிருப்பு கல்வி வலயம் முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இம்முறை நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண மட்ட போட்டிகளின் பட்டிருப்பு கல்வி வலயம் மீண்டும் சாம்பியனாக தெரிவு. 28 தங்கப் பதக்கங்களுடன் 189 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டு.

பட்டிருப்பு கல்வி வலய பாடசாலைகள் அடிப்படையில் 95 புள்ளிகளுடன் களுதாவளை மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) 95 புள்ளிகளையும், செட்டிபாளையம் மகா வித்தியாலயம் 58 புள்ளிகளையும், மண்டூர் சக்தி மகா வித்தியாலயம் 18 புள்ளிகளையும், .பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலம் 5 புள்ளிகளையும் மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம் 5 புள்ளிகளையும், மண்டூர் விக்னேஸ்வரா மகா வித்தியாலம் 5 புள்ளிகளையும் .

03 தேற்றாத்தீவு மகா வித்தியாலயம் 3 புள்ளிகளையும்,கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயம் 1 புள்ளியையும் பெற்றுக் கொண்டன.

பதக்கப்பட்டியலில் அடிப்படையில் 12 தங்கப்பதக்கங்களுடன் களுதாவளை மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை )முதலாம் இடத்தையும், 10 தங்கப்பதக்கங்களுடன் செட்டிபாளையம் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும்,

03 தங்கப்பதக்கங்களுடன் மண்டூர் 14 சக்தி மகா வித்தியாலயம்

மூன்றாவது இடத்தையும் ,

பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயம்,.மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம் . மண்டூர் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகியன தலா 1 தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டன.





# நல்லடக்கமா எரிப்பா என்ற பிரச்சினை ; நாமே வீதிக்கு இறங்கி போராடினோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச காத்தான்குடியில் தெரிவிப்பு

அநுரகுமார திசாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் தனக்கும் இடையில் வித்தியாசம் இருக்கின்றது. நல்லடக்கம் செய்வதா எரிப்பதா என்கின்ற பிரச்சினையின் போது தலைவர்கள் என்று கூறிக் கொள்கின்றவர்கள் அந்தப் பிரச்சினையை வைத்து எவ்வாறு செயற்பட்டார்கள் என்று ஆராய்ந்து பார்க்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன். இவர்கள் அன்றைய காலத்தில் முஸ்லிம் சமூகத்திற்காக முன்நிற்பதற்கு அச்சமடைந்தார்கள். அன்று எவ்வாறு இருந்தவர்கள் இன்று முஸ்லிம்களுடைய வாக்குகளை எதிர்பார்த்து முஸ்லிம்களிடத்தில் செல்கின்றார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்களை எரிப்பதா நல்லடக்கம் செய்வதா என்கின்ற பிரச்சினையின் போது உலக சுகாதார ஸ்தாபனம் இது தவறான விடயம் என குறிப்பிட்டது. ஆனால் முஸ்லிம் சமூகத்தை பாதிப்பிற்குள்ளாக்கும் வகையில் கோட்டாபய அரசாங்கம் செயற்பட்டது. அன்று முஸ்லிம் சமூகத்துக்காக ஐக்கிய மக்கள் சக்தியே முன்னின்று செயற்பட்டது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.





அன்று முஸ்லிம் சமூகத்தை பழி வாங்குவதற்காகவே அவர்கள் அவ்வாறு செயற்பட்டார்கள். இந்த தவறான செயற்பாடுகளுக்கு எதிராக சஜித் பிரேமதாசவாகிய நானும் ஐக்கிய மக்கள் கூட்டணியுமே வீதிக்கிறங்கியது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன, மத, குல பேதங்களின்றி அனைவரையும் சம அளவில் மதிக்கின்றவர்களே நாட்டின் தலைவர்களாக வேண்டும். அவ்வாறான தலைவர் ஒருவரை நியமித்துக் கொள்வது மக்களின் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 60 ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் செப்டம்பர் 15 ஆம் திகதி காத்தான்குடியில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

பலஸ்தீன மோதலின் போது அதற்காக ரணசிங்க பிரேமதாச முன்நின்றதோடு, இன்று தானும் பலஸ்தீன மக்களின் உரிமைக்காக முன்நிற்கின்றேன். ஹிட்லரின் நாசிசப் படை ஜெர்மனிக்கு செய்ததையே இன்று பலஸ்தீனத்திலும் செய்கின்றார்கள். அவ்வாறான பெரும் பாதிப்புக்கு உள்ளான இஸ்ரேல் இன்று பாலஸ்தீன மக்களை இலக்கு வைத்து மேற்கொள்கின்ற பாரிய அரச தீவிரவாதத்தை வன்மையாக கண்டிக்கின்றோம். ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் இதனை தெரிவிப்பதற்கு அச்சமடைந்தாலும், இதனை நாம் வெளிப்படையாக தெரிவிக்கின்றோம். இந்த இரண்டு அரசாங்கங்களும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் காணிகளை பயன்படுத்தி காணி இல்லாதவர்களுக்கு காணிகளையும், வீடில்லாதவர்களுக்கு வீடுகளையும் பெற்றுக் கொடுப்போம். தான் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுத்தது போன்று மீண்டும் வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்தோடு நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளையும், அனைத்து வைத்தியசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாகவும் வைத்தியசாலைகளாகவும் மாற்றுவோம். அத்தோடு ஆங்கில மொழிக் கல்வியையும் வழங்குவோம் என தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர், இளைஞர்களுக்காகவும் தனியான வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம் எனவும் குறிப்பிட்டார்.

இன மத குல வகுப்பு கட்சி பேதங்கள் இன்றி மனிதநேயத்தை முதன்மைப்படுத்தி மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல்கள் மூலமும், இணக்கப்பாட்டோடும், ஒற்றுமையாகவும் தீர்வினை காண்கின்ற இந்த பயணத்தில் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சகலருக்கும் அழைப்பு விடுத்தார்.

# இ.தோ.கா ஒரு முடிவெடுத்தால் அதிலிருந்து ஒரு போதும் பின்வாங்காது!

## செந்தில் தொண்டமான் நுவரெலியாவில் முழக்கம்

1350 ரூபா சம்பளத்தை விமர்சிப்பவர்களால் மீதம் உள்ள 350 ரூபாயில் 3 ரூபா சம்பள அதிகரிப்பை வாங்கிக்கொடுக்க முடியுமா என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று ஞாயிற்றுக்கிழமை நுவரெலியாவில் இடம்பெற்ற பிரமாண்ட பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் இதன்போது கூறியதாவது,

2021, 2022ஆம் ஆண்டுகளில் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்த காலகட்டமாகும். யுத்தத்தின் போது கூட இத்தகைய நெருங்கடிகளை இலங்கை எதிர்கொண்டிருக்கவில்லை. நாட்டை பாதுகாத்து முன்னோக்கிக் கொண்டுசெல்ல எவராவது வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதும் ஒருவரும் வரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அன்று நாட்டை பொறுப்பேற்க வரவில்லை என்றால், இன்று எரிவாயுவின் விலை 20ஆயி 'ரத்தை கடந்திருக்கும். அரிசியின் விலை 1000ம் ரூபாவையும் பெற்றோலின் விலை 3000ம் ரூபாவையும் கடந்திருக்கும்.

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றப்பின்னர் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களின் விலைகள் படிப்படியாக குறைந்தன. தற்போது நாடு இக்கட்டான நிலையை கடந்து பயணித்துகொண்டிருக்கும் தருணத்தில் அனைவரும் ஆட்சியை பொறுப்பேற்க முன்வருகின்றனர்.

நாட்டை மீட்டெடுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுடன் அடுத்த ஐந்து ஆண்டுகளும் பயணித்தால் நாடு முன்னோக்கி நகரும். அதைவிடுத்து ஏனையவர்களை நம்பி வாக்களித்தால் அவர்கள் அல்ல எரிபொருளுக்காகவும், அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ளவும் வரிசையில் சென்று நிற்க போவதில்லை. நாம் தான் வரிசையில் சென்று நிற்க வேண்டும்.



இதற்கு இ.தொ.கா ஒருபோதும் இடமளிக்காது. அதனால்தான் இ.தொ.கா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க முடிவெடுத்தது.

சம்பளப் பிரச்சினையை பற்றியே அனைவரும் பேசுகின்றனர். 1350 ரூபா அடிப்படை சம்பளத்தை இ.தொ.கா பெற்றுக்கொடுத்துள்ளது. இதற்கான வர்த்தமானியும் வெளியாகிவிட்டது. எஞ்சியுள்ள 350 ரூபா கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பது இ.தொ.காவின் பொறுப்பு.

7 கிலோ அதிகமாக பறித்தால் 50 ரூபா வீதம் 350 ரூபாவை வழங்குவதாக கம்பனிகள் கூறியது. ஆனால், அதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. 7 கிலோ பறித்தால் மேலதிகமாக 350 கிடைக்கும் என எமக்கு தெரியாதா? அல்லது 10 கிலோ அதிகமாக பறித்தால் 500 ரூபா கிடைக்கும் என எமக்குத் தெரியாதா?

நாம் கோருவது கம்பனிகள் ஊடாக எவ்வித நிபந்தனைகளுமின்றி 350 ரூபா அனைத்துத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே. தோட்டத் தொழிலாளர்களை பகடைக்காயாகப் பயன்படுத்தும் எந்தவொரு ஒப்பந்தத்திலும் காங்கிரஸ் கையெழுத்திடாது. அது தேர்தல் ஒப்பந்தமாக இருந்தாலும் சரி நாம் கையெழுத்திட மாட்டோம்.

மறைந்த தலைவர்களாக சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் எமக்கு கூறியது இ.தொ.காவின் இறுதி மூச்சு இருக்கும் வரை மலையக மக்களை பாதுகாக்க வேண்டும் என்பதுதான். அதனால் காங்கிரஸை கேள்விக் கேட்கும் தகுதி எவருக்கும் இல்லை.

காங்கிரஸ் அனைத்துத் தொழிலாளர்களுக்கும்தான் சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்துள்ளது. விமர்சிப்பவர்களிடம் நாம் விடுக்கும் சவாலானது, முடிந்தால் உங்கள் தொழிற்சங்கத்தில் உள்ளவர்களுக்காவது 350 ரூபாவை பெற்றுக்கொடுங்கள். முடியாவிட்டால் 35 ரூபாவையேனும் பெற்றுக்கொடுங்கள். 3 ரூபாவைக்கூட வாங்கிக்கொடுக்க முடியாதவர்கள் எதற்கு தொழிற்சங்கங்களை நடத்துகின்றனர்?

350 ரூபாவால் ஒரு ரூபாவைகூட வாங்கிக் கொடுக்க முடியாதவர்கள் தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் அறிக்கைகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்தி வருகின்றனர். எஞ்சியுள்ள 350 ரூபாவை முடிந்தால் விமர்சிக்கும் நீங்கள் வாங்கிக்கொடுங்கள்.

காங்கிரஸை விமர்சிக்கவும் கேள்வி கேட்கவும் இலங்கையில் எந்தவொரு தொழிற்சங்கத்துக்கும் அதிகாரம் இல்லை என்பதுடன், தகுதியும் இல்லை. ஆகவே, எஞ்சியுள்ள 350 ரூபாவையும் காங்கிரஸ்தான் பெற்றுக்கொடுக்கும். லயன் அறைகளையும் அதனை சுற்றியுள்ள இடத்தையும் கிராமங்களாக அங்கீகரிக்குமாறு ஜனாதிபதியுடன் கோரியிருந்தோம். லயத்தில் ஒரு ஆணி அடிக்கக்கூட எமக்கு அதிகாரம் இல்லை. அவ்வாறான ஒரு உரிமை அவசியமா? ஆகவே, எமது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். லயத்தை சுற்றியுள்ள 10 ஏக்கர் காணியை கிராமங்களாக அங்கீகரிக்குமாறு கோரியுள்ளோம்.

2004 ஆம் ஆண்டு அநுரகுமார திசாநாயக்க விவசாய அமைச்சு, காணி அமைச்சுக்களில் இருந்த வேளையில் ஒரு அங்குல காணியைக் கூட மக்களுக்கு வழங்கியதில்லை. சஜித் பிரேமதாச 2015 - 2019 வரையில் வீடமைப்பு அமைச்சராக இருந்தார். இந்திய அரசாங்கம் வழங்கிய உதவிகளுக்கு மிஞ்சியதாக ஒரு வீட்டைக்கூட கட்டித்தரவில்லை. அமைச்சராக இருந்தபோது மலையகத்தை தெரியாதவர் கண்களுக்கு ஜனாதிபதியான பின்னர் மலையகம் தெரியுமா? இன்று மலையக மக்கள் மீது அக்கறையுள்ளவர்கள் போன்று பேசுகின்றனர். ஆனால், அதிகாரம் இருந்த தருணத்தில் அவர்கள் எதனையும் செய்யவில்லை.

1988 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜயவர்தன காலத்தில் சௌமியமூர்த்தி தொண்டமானே மலையக மக்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுத்தந்தார். அதற்கும் மற்றைய வேட்பாளர்கள் உரிமை கோருவது தவறானது.

அனைவரும் வரலாற்றை மறந்திருக்கக்கூடும். பிரேமதாசவின் காலத்திலேயே மலையக மக்களுக்கு குடியுரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டதாக கூறுகின்றனர். ஆனால், மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் காலத்தில் அவருடன் பேச்சுகள் நடத்தியே மலையக மக்களுக்கான குடியுரிமையை பெற்றுக்கொடுக்கும் பணியை ஆரம்பித்திருந்தார். அதன் காரணமாகவே அவரது அமைச்சரவையில் சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு முக்கிய பதவியும் வழங்கப்பட்டது.

மலையக மக்களுக்காக பல அபிவிருத்திட்டங்களை செய்தவரே ரணில் விக்ரமசிங்க. வீடமைப்புத் திட்டங்களை கொண்டுவந்தார். பிரதேச செயலகங்கள் மற்றும் புதிய பிரதேச சபைகளை உருவாக்கினார். எனவே, ஜனாதிபதியின் வெற்றியை உறுதி செய்ய வேண்டியது மக்களின் பொறுப்பாகும்

ஜனாதிபதிக்கான ஆதரவு நிலைப்பாட்டில் இருந்து இ.தொ.கா பின்வாங்குமா என அண்மைய நாட்களாக கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆனால், இ.தொ.கா ஒரு முடிவை எடுத்தால் அந்த முடிவில் இருந்து பின்வாங்காது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வெற்றிபெற வைப்பதே இ.தொ.காவின் பிரதான கடமை. ஜனாதிபதியின் வெற்றிக்காக இ.தொ.கா 100 வீதம் உழைக்கும்.என்றார்.

# போது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக்கட்சியினர் செயற்பாடு சங்கடங்களை தருகின்றது

**(பாறுக் ஷிஹான்)**

தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் ஊடாக தமிழ் மக்களின் எதிர்கால திட்டங்கள் சிறப்பாக செயற்படும் என காரைதீவு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு முக்கியஸ்தருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பு அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளர் தொடர்பில் தமிழரசுக்கட்சியினர் இரண்டாக பிரிந்து நிற்பது வடகிழக்கு தமிழர்களுக்கு சங்கடங்களை தருகின்றது.தமிழரசுக்கட்சி தலைமைகள் தளம்பல் நிலையில் இருந்தமையினால் உறுப்பினர்கள் பல்வேறு வேட்பாளர்களுக்கு ஆதரவளித்து வருகின்றார்கள்.இவ்வாறு பல உருவங்களாக பிரிவதற்கு தமிழரசுக் கட்சி தலைமைகள் விட்ட பிழையே காரணமாகும்.நாங்கள் இந்த அரசாங்கத்தில் எவரையும் நம்ப விரும்பவில்லை.இங்கு ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது.எமது மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள்.எனவே எதிர்வரும் தேர்தலில் எமது கோரிக்கையானது சங்கு சின்னத்திற்கு வாக்களிப்பதும் எமது ஒற்றுமையை உலகிற்கு பறைசாற்றுவதுமாகும் என குறிப்பிட்டார்.



# முஸ்லிம்களுடைய எந்தக் கடமையும் நீக்கப்பட மாட்டாது

## சாய்ந்தமருதில் அநுரகுமார திஸாநாயக்க வாக்குறுதி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம்கள் என் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை எப்போதும் உடைக்க மாட்டேன். அதனைப் பாதுகாப்பேன் என நான் உங்களுக்கு உறுதிமொழி வழங்குகின்றேன் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்கவை ஆதரித்து ஏற்பாடு செய்த கல்முனை தொகுதியின் வெற்றிக்கான மாபெரும் தேர்தல் பிரசார கூட்டம் (13) வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது மருதூர் சதுக்கத்தில் நடைபெற்றது.

''வளமான நாடு அழகான வாழ்க்கை'' எனும் தொனிப்பொருளில், தோழர் அநுர குமார திசாநாயக்கவின்

கல்முனை தேர்தல் தொகுதி இணைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினருமான ஏ. ஆதம்பாவாவின் தலைமையில் இடம்பெற்ற இம்மாபெரும் விழாவில்,பேசிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்க மேலும் கூறுகையில்,

எதிர்வரும் சனிக்கிழமை தேர்தல். நாங்கள் என்ன செய்வது? நீங்கள் வாக்களிக்கத் தயாரா? நீண்ட காலமாக எங்கள் நாட்டு மக்கள் தலைவர்களைக் கொண்டு வந்தார்கள். ஆட்சிகளைக் கொண்டு வந்தார்கள். ஆட்சிகளை மாற்றினார்கள். தலைவர்களை மாற்றினார்கள். ஆனால், என்ன நடந்ததென்றால், நாடானது அதல பள்ளத்தில் விழுந்தது. பொதுமக்கள் ஏழைகளாக மாறினர். ஆனால், அரசாங்கங்கள் மூலமாக ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட ஆட்சியாளர்கள் வசதியாளர்களாக மாறினார்கள். நாடு ஏழையானது. பொதுமக்கள் ஏழையானார்கள். ஆகையினால், மிக முக்கியமான காரணம், இந்த ஆட்சியாளர்கள் எங்களது நாட்டை வெற்றி பாதைக்கு கொண்டு செல்ல முயற்சிக்கவில்லை. இந்த ஆட்சியாளர்கள் அவர்கள் தங்களை வெற்றி கொள்வதற்காகத்தான் முயற்சி செய்தார்கள்.

ஆகையினால், செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி ஓர் அரசாங்கத்தைக் ஆக்கிக் கொள்வோம். இந்த நாட்டைக் கட்டி எழுப்பக் கூடிய அரசாங்கம் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம்.

தற்போது இந்தத் தேர்தலை சற்று உற்று நோக்கிப் பார்க்கும் பொழுது தேசிய மக்கள் சக்தியின் வெற்றி உறுதியாகிவிட்டது. தெற்கிலே வாழுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களும் கைகோர்த்துக்கொண்டு தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து இருக்கின்றார்கள். இந்த சாய்ந்தமருதிலே வாழுகின்ற முஸ்லிம் மக்களின் முடிவு என்ன?

ஆனால், இந்த வெற்றியை தவிர்ப்பதற்காக அவர்கள் பொய்களையும் கட்டுக்கதைகளையும் இட்டுக் கதைகளையும் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அண்மையில் ஹிஸ்புல்லாஹ் வந்தார். ஹிஸ்புல்லாஹ் இந்த இடத்துக்கு வந்து, எங்களைப்பற்றி மிக மோசமாக இழிவாக பேசிச் சென்றார். முஸ்லிம் மக்கள் தங்களுடைய மார்க்கக் கடமைகளில் முக்கியமாகக் கருதுகின்ற இரண்டு பெருநாட்கள். ஒன்று நோன்புப் பெருநாள் மற்றது ஹஜ்ஜுப் பெருநாள். ஹிஸ்புல்லாஹ் சொன்னாராம், நாங்கள் வந்தால், ஒன்றை நிப்பாட்டுவோம் என்று. ஹிஸ்புல்லாஹ்வின் தலையை கொஞ்சம் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல. அதன் பின்னர் சொல்கிறார். முஸ்லிம்களுக்கு ஐந்து நேர தொழுகைக்கான இடம் கொடுக்க மாட்டோம் என்றார். அவர்களை நன்றாக பாருங்கள். முஸ்லிம் மக்களை ஏமாற்றி எவ்வாறு கதைக்கின்றார்கள். இந்த இடத்திலேயே நாங்கள் பார்க்கின்ற போது, திஸ்ஸ அத்தநாயக்க என்ன சொல்கிறார் என்றால், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அங்கே பெரஹரா நடத்த விட மாட்டோம் என்று கூறுகிறார். அதேபோன்று அவரது மேடைக்கு வந்த சில மதகுருமார் சொல்கின்றார்கள். அவர்களுக்கு நாங்கள் வந்தால் தானம் கிடைக்காது என்று. இது அரசியல் கதையா?, இது அரசியல் விமர்சனமா? இதற்கு நாங்கள் சொல்வது இழிசொல். இதற்கு நாங்கள் சொல்வது பொய் என்று. உண்மையிலேயே மதம் தொடர்பாக கௌரவம் இருக்குமாக இருந்தால், உண்மையிலேயே மதம் தொடர்பாக நாங்கள் சுதந்திரத்தை எதிர்பார்த்தால், அரசியல் மேடைகளிலே சொல்லக்கூடாத விடயங்கள் அவை. இந்த சமயம் தொடர்பான விடயங்களை உசுப்பேத்தி விடுகிறார்கள். எங்களுடைய நாட்டிலே சிங்கள, தமிழ், முஸ்லிம், பேகர் என பல்வேறு இன மக்கள் வாழ்கின்ற நாடு. அதேபோன்றுதான் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற பல்வேறுபட்ட மதங்களைப் பின்பற்றி வருகின்ற நாடு. தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு பிரதான மொழிகளைப் பேசுகின்ற நாடு. சிங்களவர்களை எடுத்துக் கொண்டால், அவர்களுடைய உரித்தான கலாசாரம் இருக்கின்றது. தமிழ் மக்களுக்கு அவர்களுடைய கலாசாரம். அதேபோன்று முஸ்லிம் மக்களுக்கு அவருடைய கலாசாரத்தைக் கொண்ட நாடாக இருக்கின்றது. ஆகையினால், இந்த நாட்டின் எதிர்காலம் தங்கி இருப்பது, இவ்வாறு பல்வேறுபட்ட, மக்களுக்கிடையிலே ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலமாகத்தான். ஆகையினால், தேசிய மக்கள் சக்தியானது, உங்களுடைய மதத்தைப் பின்பற்றுகின்ற உரிமையை. உங்கள் மொழி உரிமையை. உங்களது கலாசார அடையாளத்தை. ஏற்றுக் கொள்ளக்கூடிய சுதந்திர நாட்டைத்தான் தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்றது. ஆனால், ஹிஸ்புல்லாஹ் அதற்கு மாற்றமாக பொய்யைக் கூற முற்பட்டிருக்கின்றார்.

எங்களது தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டிருக்கின்றது. எந்தவொரு மதமாக இருந்தாலும், எந்தவொரு கலாசாரமாக இருந்தாலும், எந்தவொரு மொழியாக இருந்தாலும் இதற்காக அவர்கள் பல்வேறு விடயங்களிலேயே இதனை மாற்றமாகக் கருத்திற் கொண்டால், அதற்கு எதிராக அவர்களுக்கு முறைப்பாடு செய்து தண்டனை வழங்கக் கூடிய ஒரு கொமிஷனை நாங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

அரசியலுக்கு மதம் தொடர்பான வசனங்களை வெளியிடுவது, அதேபோன்று அரசியலுக்கு மதம் தொடர்பான விடயங்களைக் கூறுவது, இவ்வாறு சொல்வதை, செயற்படுத்துவதை நிறுத்துவது தான் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம். எங்களுக்கு தேவைப்படுவது என்னவென்றால், தான் தேசிய ஒற்றுமை உடனான நாடு. அனைவரும் சகோதரத்துடன் வாழக்கூடிய நாடு. எல்லோரும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு நாடு. ஆகையால்தான் உங்களை நாங்கள் சந்திக்க வந்திருக்கின்றோம்.

செப்டம்பர் 21ஆம் திகதி நாங்கள் வெல்ல வேண்டும். தெற்கிலே வாழுகின்ற மக்களுடைய நம்பிக்கை மட்டுமல்ல, கிழக்கிலே வாழுகின்ற உங்களுடைய நம்பிக்கையும் எங்களுக்குத் தேவைப்படுகின்றது. நீங்கள் அதற்குத் தயாரா? இலங்கையில் முதல் முறையாக நாங்கள் ஏற்படுத்துவோம். தெற்கு மக்களாக இருந்தாலும், கிழக்கு மக்களாக இருந்தாலும், வடக்கு மக்களாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசாங்கம் ஒன்றை சிங்கள, தமிழ், முஸ்லிம் எல்லா மக்களினதும் நம்பிக்கையை வென்ற ஓர் அரசாங்கமாக நாங்கள் ஏற்படுத்தப் போகின்றோம்.

உங்களுக்கு தெரியும் இங்கே ஏற்கனவே அரசியல் கட்சிகள் வருவது சஜித் வருவது ஹக்கீமை தோலில் வைத்துக் கொண்டு. ரணில் வருவது அதாவுல்லாஹ்வை தோலில் வைத்துக் கொண்டு. நாங்கள் வருவது பொது மக்களே உங்களது நம்பிக்கையை தோலில் வைத்துக் கொண்டு. இவ்வாறான ஒற்றுமையான செயற்பாடு ஆரம்பித்து இருக்கின்றது. தமிழ் மக்கள்,சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு கட்சி. தலைவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சி அல்ல. பொதுமக்களாகச் சேர்ந்த ஒரு செயற்றிட்டம். இதுதான் தேசிய மக்கள் சக்தி. இந்த இடத்திலே ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் இருக்கின்றீர்கள். இதில் சகோதரிகள் இருக்கிறார்கள். சகோதரர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து என்ன சொல்கின்றீர்கள்? நாங்கள் தயார். உங்களது நம்பிக்கையை வெற்றி கொள்வதற்காக. அப்படித்தானே?

நான் உங்களுக்கு ஓர் உறுதிமொழி வழங்குகின்றேன். நீங்கள் என் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை ஆகக் குறைந்தது ஒரு சிறு துளியாவது உடைக்க மாட்டோம். அதனைப் பாதுகாப்போம்.

உங்களுக்குத் தெரியும். 2015 இல் மஹிந்த ராஜபக்ச தோல்வி அடைந்தார். அவர்கள் மீண்டும் தங்களது அரசியலுக்குள் வருவதற்காக ஒரு வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மீண்டும் களவை பிடிக்க மாட்டோம் என்று. மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. ஜனநாயகத்தை நாங்கள் உருவாக்கப் போகிறோம் என்று 2015க்குப் பின்னர் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. 2018 க்கு பின்னர் நாட்டு மக்களின் பிரச்சினையை தீர்க்க போகிறோம் என்று அவர்கள் ஆட்சியைப் பிடிக்க முடியாது. ஆகையினால் அவர்கள் தங்களுக்குள்ளே ஒரு வரைபடத்தை வரைந்தார்கள். அந்த வரைபடம் தான் முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதம் ஒன்றைக் கிளப்பி விட்டார்கள். அம்பாறையில் இருக்கின்றவர் கொத்து தயாரிக்கின்றார். அது கருத்தடை கொத்து என்று சொன்னார்கள். அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக இனவாதத்தை விதைத்தார்கள். முஸ்லிம் கடைகளில் விற்கப்படுகின்ற ஆடைகள் கருத்தடை ஆடைகள். அவற்றை நாங்கள் அணிந்தால் கருத்தடை ஏற்படும் என்று சொன்னார்கள். இவ்வாறு இனவாதத்தை கிளப்பி விட்டார்கள்.

அதேபோல தான் கருத்தடை வைத்தியர்கள் இருப்பதாக சொன்னார்கள். சிங்கள பெண்களை அவர்கள் கருத்தடைக்கு உட்படுத்தியதாகச் சொன்னார்கள். இவ்வாறு இனவாதத்தை கிளப்பி விட்டார்கள். இவ்வாறு இனவாதத்தை கிளப்பி,

2019 இலே கோட்டாபய சொன்னார். எங்களது இனத்தை பாதுகாப்பதற்காக, மதத்தை பாதுகாப்பதற்காக கோட்டாவை வெற்றி பெறச் செய்வது என்று சொன்னார்கள். இவ்வாறு சிங்கள மக்கள் கூட்டம் கூட்டமாக சென்று வெற்றி பெற வைத்தார்கள். இப்பொழுது அந்த மொட்டு எங்கே? அந்த மொட்டுதான் தான் கொரோனா நோய் வருகின்ற போது, முஸ்லிம் மக்கள் இறக்கின்ற போது, அவர்களுடைய ஜனாஸாக்களை அடக்கம் செய்யாமல் எரித்தார்கள்.

இது யாருடைய அரசாங்கம். மொட்டுவினுடைய அரசாங்கம். இப்போது எங்கே அந்த மொட்டு?

இந்த மொட்டுவின் அதிகமானவர்கள் இப்போது ரணில் விக்கிரமசிங்க பக்கம் இருக்கிறார்கள். அன்று இனவாதத்தை விதைத்த மொட்டு. நல்லடக்கம் செய்ய விடாமல் எரித்த மொட்டானது இன்று இருப்பது ரணில் விக்கிரமசிங்கவுடன்.

இன்று மொட்டுவின் தலைவர் யார் என்றால் ரணில். மற்றவர் யாரோடு இருக்கின்றார்கள் மொட்டுக் கட்சிகளின் தலைவர் ஜி.எல்.பீரீஸ். அவர்கள் இனவாதத்தை விதைத்தவர்கள். முஸ்லிம் மக்களுடைய உடலை எரிக்க வேண்டும் என்று முடிவு கண்டபோது கெபினட்டிலே இருந்தவர் எங்கே இருக்கின்றார்?

அதேபோன்றுதான் முஸ்லிம் மக்களுடைய உடல்கள் எரிக்கப்பட வேண்டும் என்று சொன்ன அமைச்சர் அழகப் பெரும சஜித் பிரேமதாச பக்கம் இருந்து கொண்டிருக்கிறார். அதேபோன்றுதான் முஸ்லிம் உடல்களை எரிக்க வேண்டும் என்று சொன்ன நாலக கொடஹேவா போன்றவர்கள் சஜித் பிரேமதாஸவோடு இருக்கிறார்கள். இவ்வாறு இனவாதத்தை விதைத்தவர்கள் எல்லாம் அவர்களோடு இருக்கின்றார்கள். ஆகையினால், நீங்கள் ரணிலைப் பார்த்தாலும் அந்த இடத்திலே மொட்டின் ஓர் இலை இருக்கின்றது. சஜித்தைப் பார்த்தாலும் இனவாதத்தை விதைத்த அந்தக் கூட்டம் சஜித்தோடு இருக்கின்றது. இவ்வாறு இனவாதத்தில் விழாத ஒரேயொரு செயற்றிட்டம் தேசிய மக்கள் சக்தி மாத்திரம் தான்.

யாரைத் தேர்ந்தெடுப்பது?

உங்களிடம் நான் கேட்கிறேன் யாரை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்? தேர்ந்தெடுக்க வேண்டும் நீங்கள்? தேசிய மக்கள் சக்தியைத் தான்.

அது மாத்திரமல்லாமல் எங்களுடைய அரசியலானது மிகவும் மோசமான சூதாக இருக்கின்றது. அந்தப் பக்கம் இருக்கிறவர் இந்த பக்கம் பார்க்கிறார். இந்தப் பக்கம் இருக்கின்றவர் அந்தப் பக்கம் பார்க்கின்றார்.

இப்போது அதாவுல்லாஹ் எந்த பக்கம்?

என்ன நடந்திருக்கிறது? அங்கும் இங்கும் பாய்கின்ற அரசியலை நாங்கள் மாற்றத் தேவையில்லையா? எங்கள் நாடு விழுந்ததற்கு காரணம் இவ்வாறு அரசியல்வாதிகள் மாறி மாறி ஒவ்வொரு கட்சிக்கு தாவி ஒரு மாதத்துக்கு முதல் ஏசுவார். அடுத்த மாதத்தில் அவரை கட்டிப் பிடித்துக் கொள்வார். என்ன அரசியலில் இது. இதை மாற்றத் தேவையில்லையா? பாய்கின்ற இந்த அரசியலை மாற்ற வேண்டும்.

கீதாவின் அரசியலைப் பாருங்கள். போன கிழமை சொன்னார் ரணில்தான் நல்ல டொப் என்று. இந்த வாரம் சொல்கிறார் சஜித்தான் நல்ல டொப் என்று. போற ஆட்களுக்கு வெட்கமும் இல்லை; எடுக்கிற ஆட்களுக்கு வெட்கமும் இல்லை. இவ்வாறான அரசியலை நாங்கள் மாற்றத் தேவையில்லையா?

இப்போது நீங்கள் பாருங்கள். சம்பிக ரணவக்க. அவர்தான் பொது பல சேனா மஹரகம மேடையில் ஏறியவர். இப்போது சம்பிக ரணவக்க யாரோடு? சஜித் பிரேமதாஸ பக்கம்.

றிஷாத் பதியுதீன் சஜித் பிரேமதாஸ பக்கம். என்ன நடக்கும் தெரியுமா? சஜித் பிரேமதாச கிழக்குக்கு வருகின்றபோது ஹக்கீமை போட்டுக் கொண்டு வருவார். சம்பிகவை ஒழித்து வைப்பார். சம்பிக வந்தாரா? எப்போதாவது கிழக்குக்கு வந்திருக்கிறாரா? கிழக்குக்குவரும்போது சம்பிகவை ஒழித்து வைத்துவிட்டு வருவார். மாத்தறைக்குச் செல்கின்ற போது ஹக்கீமை ஒழித்து வைத்துவிட்டு சம்பிகவை எடுத்துக் கொண்டு போவார். என்ன அரசியல் இது? நல்ல அரசியலா இது? மன்னாருக்குப் போகின்ற போது றிஸாத் பதியுதீனைக் கூட்டிக் கொண்டு போவார். சம்பிகவை ஒழித்து வைத்து விடுவார். காலிக்குப் போகின்ற போது றிஸாத் பதியுதீனை ஒழித்து வைத்து வடுவார். சம்பிகவைக் கூட்டிக் கொண்டு போவார். என்ன அரசியல் இது? கொள்கை ரீதியான அரசியலா இது? வடக்குக்குச் சென்றாலும் ஒரே கதை தான். தெற்கு சென்றாலும் ஒரே கதை தான். கிழக்குக்கு வந்தாலும் ஒரே கதை தான் ஒரேயொரு செயற்றிட்டம் தேசிய மக்கள் சக்தி மாத்திரம் தான்.

நாங்கள் இந்த விளையாட்டை இது போன்று பேப்பரை ஒழித்து வைத்துவிட்டு விளையாட மாட்டோம். அவர்கள் கடதாசிகளை மறைத்து வைத்து விளையாடி விட்டார்கள். சம்பிகட பேப்பரை கிழக்குக்கு மறைப்பார்.

திலங்க சுமதிபலவின் பேப்பரை மறைப்பார் கிழக்குக்கு வருகின்ற போது. தெற்கு வருகின்ற போது ஹக்கீம், றிஸாதுடைய பேப்பரை மறைத்து விடுவார். இதுவே போதும் இவர்களைத் தோற்கடிப்பதற்கு.

ஆகையினால், செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி எல்லோரும் ஒரு முடிவை எடுக்க வேண்டும். அனைவரும் ஒன்று சேர்ந்து அரசாங்கம் ஒன்றை உருவாக்குவோம். நீங்கள் எங்கள் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை நாங்கள் பாதுகாப்போம். நாங்கள் இந்த நாட்டைக் கட்டி எழுப்ப ஆரம்பிப்போம். செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி தேர்தல். நிச்சயமாக வெற்றி பெறுவோம். 22 பாராளுமன்றத்தை கலைப்போம். அதன் பின்னர் கிட்டத்தட்ட ஒன்றரை மாதம் செல்லும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு..

நாட்டில் உள்ள மக்கள் நிச்சயமாக இந்த பாராளுமன்றத்தில் இருக்கின்ற மூன்றில் இரண்டு பங்கை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். இவர்களை அனுப்பத் தேவையில்லையா?

கொச்சிக்காய்த்தூள் கொண்டு வரும் அமைச்சர்கள் இருக்கின்றார்கள். கத்தி எடுத்துக் கொண்டு வருகின்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். புத்தகத்தை அங்கெங்குமாக வீசுகின்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

பார் அனுமதிப் பத்திரம் எடுப்பதற்காக

அவர்களது பக்கத்தை மாறுகின்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அங்கு சபையின் மத்தியிலே அடித்துக் கொள்கின்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

கப்பம் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட பிரசன்ன ரணதுங்கவும் பாராளுமன்றத்தில் இருக்கின்றார். அங்கும் இங்கும் பாய்கின்ற நிறையப் பேர் இருக்கின்றார்கள். இந்தப் பாராளுமன்றத்தை நாங்கள் சுத்தப்படுத்த தேவையில்லையா? கொள்கை இருக்கின்ற மக்களிடத்திலே, களவு எடுக்காத மக்களிடத்திலே, உண்மையான மக்களைக் கொண்டவர்களாக இந்த பாராளுமன்றத்தை நாங்கள் நிரப்ப வேண்டும். நீங்கள் இதற்குத் தயாரா? அதன் பின்னர் நாங்கள் ஓர் அமைச்சரவையை உருவாக்குவோம். நாங்கள் நாட்டுக்குத் தேவைப்படுகின்ற முக்கியமான முடிவுகள் பலவற்றை எடுப்போம். இந்த அரசியல்வாதிகளுக்கு பகிர்ந்து கொள்வதற்காக அல்ல. நாங்கள் வருவது கை விடுவதற்காக. அண்மைக்காலத்தில் பெட்ரோலின் விலைகள் உயர்ந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்த எரிபொருள் செலவை ஒரு லட்சமாக உயர்த்தினார்கள். நாங்கள் மட்டும்தான் அதனை எடுக்கவில்லை. எங்களுக்கு எரிபொருள் வரிசை இருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரிசையில் நிற்காமல் தனியாக எரிபொருள் நிரப்பும் நிலையத்தை உருவாக்கினார்கள். நாங்கள் அந்த எரிபொருள் நிலையத்துக்குச் சென்று எரிபொருள் அடிக்கவில்லை.

மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள், மற்றும் சிறியதொரு காரைக் கூட இறக்க முடியாது. ஆனால், ரணில் விக்கிரமசிங்கை சந்தித்து மரைக்கார் சொல்லுகிறார். கார் அனுமதிப் பத்திரம் தாருங்கள் என்று. நீங்களும் கண்டீர்கள் தானே? அவர்கள் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்ளத்தான் இருக்கிறார்கள். நாங்கள் ஓர் அரசை உருவாக்குவோம். நாங்கள் எங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்வதற்காக அல்ல. கை விடுவதற்காக.

இவ்வாறு தான் எங்களது அமைச்சரவை முடிவு.

முதலாவது பாராளுமன்ற உறுப்பினருடைய ஓய்வூதியம் இல்லாமல் ஆக்கப்படும். நல்லது தானே? அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படுகின்ற வாகன அனுமதிப் பத்திரத்தை இல்லாமல் செய்வோம். அமைச்சர்கள் ஆகக் கூடுதலாக 25 பேர்தான். அங்கே இராஜாங்க அமைச்சர் என்றதொரு பதவி இல்லை. பிரதி அமைச்சர்கள் அமைச்சர்களுக்கு சமமாக இருப்பார்கள். அமைச்சர்களுக்கு பின்னால் ஏழு எட்டு வாகனங்கள் செல்ல முடியாது. அமைச்சர்களுக்கு அரசாங்கத்தினால் வீடுகள் வழங்கப்படாது. அமைச்சர்களுக்கு தண்ணீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணங்களை அரசாங்கம் செலுத்தாது. அதேபோலத்தன் ஜனாதிபதியுடைய ஓய்வூதியம்

இரத்து செய்யப்படும். முன்னாள் ஜனாதிபதிகளை அரசாங்கத்தினால் கவனித்துக் கொள்வது நிறுத்தப்படும். ஜனாதிபதிக்காக நாடு முழுவதும் இடம் இருக்கின்றது. இந்த இடங்களை எல்லாம் நாங்கள் ரத்து செய்வோம். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு தேவையாக இருந்தால், பாதுகாப்பு தேவையான ஏதாவது நிலை இருந்தால் மாத்திரம் தான் பொலிஸ் அதிகாரிகள் வழங்குவோம். அமைச்சருடைய காரின் கதவை திறப்பதற்கும் அவருடைய மனைவிக்கு குடை பிடிப்பதற்கு இதற்காக பொலிஸ் தர மாட்டோம். இவ்வாறு நாங்கள் நாட்டை கட்டி எழுப்பத் தேவையில்லையா? நான் 24 வருடங்களாக பாராளுமன்றத்தில் இருக்கிறேன்.



# முஸ்லிம்களுடைய எந்தக் கடமையும் நீக்கப்பட மாட்டாது

## சாய்ந்தமருதில் அநுரகுமார திஸாநாயக்க வாக்குறுதி



ஒரு நாளும் பொலிஸ் உத்தியோகத்தரை நான் பாதுகாப்புக்காக எடுத்ததில்லை. பொலிஸ் இருக்கிறது அவர்கள் நாட்டை பாதுகாப்பதற்கு.

பொது மக்களுடைய பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு. அப்போது நாங்களும் பாதுகாக்கப்பட்டுக் கொள்வோம். இவர்கள் இவ்வாறு செய்யவில்லை. நாட்டின் பாதுகாப்பு இல்லாமல் செய்து, அவர்களுடைய பாதுகாப்புக்காக பொலிஸை எடுத்துக் கொள்கிறார்கள். நாங்கள் அவ்வாறு செய்ய மாட்டோம். எங்களுடைய நாட்டிலே சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்போம். எங்களது நாட்டிலே நாங்கள் சாதாரணமாக சொல்லுகின்ற குடு இப்போது நிறைய வியாபத்து இருக்கின்றது. எங்களுடைய நாட்டிலே 10, 15 வருடங்களுக்கு முன்னர் குடு இருந்ததா? இது அத்தனையும் கொண்டு வருவது இந்த அரசியல்வாதிகள். உங்களுக்கு தெரியும். கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அகப்பட்டார். அவருடைய வாகனத்தில் இருந்தது எட்டு கிலோ. பாராளுமன்ற உறுப்பினருடைய வாகனத்தில் தான் அந்த குடுவைக் கொண்டு செல்வார்கள். அதே போன்று தான் கஞ்சா அகப்பட்டது அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருடைய வாகனத்தில் இருந்து. கேகாலை மாகாண முதலமைச்சராக இருக்கின்ற மஹிபால ஹேரத்துடைய வாகனத்தில் இருந்தது கஞ்சா. அதன் கருத்து என்னவென்றால், குடு விநியோகிப்பது அவர்கள்தான்.

இந்த நாளிலே நீங்க கண்டீர்களோ தெரியாது. ரூபவாஹினி தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. ஒரே கட்சியில் இருந்த இருவர். வேலு குமார் ரணிலுக்கு ஆதரவளித்தார். திகாம்பரம் சஜித்துக்கு ஆதரவளித்தார். இருவரும் ஒரே கட்சியில் இருந்து பாராளுமன்றத்துக்கு வந்தவர்கள். ஒரே கட்சியில் இருந்தவர்கள். அந்த தொலைக்காட்சி விவாதத்தில் என்ன சொன்னார்கள்.

திகாம்பரம் வேலு குமாரைப் பார்த்து பார் குமார் என்றார். சொல்லலியா அப்படி? சொன்னதுதானே?

வேலு குமார் திகாம்பரத்தை பார்த்து கூறுகிறார் குடு திகா என்று கூறுகிறார்.

இதன் கருத்து என்ன? அவர் பார் எடுக்கிறார். இவர் குடு விற்கிறார். இதைத்தான் சொல்கிறார்கள் அவர்கள். ஆகையினால், யார் இதனைச் செய்வது அரசியல்வாதிகள். ஆகையினால், அவர்கள் நிவாரண பணத்தைச் செலவழிப்பது யார் என்றால், குடு விற்கின்ற வியாபாரிகளின் காசு. ஆகையினால், எங்களுடைய நாட்டிலே சட்டத்தையும் சமாதானத்தையும் நாங்கள் பாதுகாக்க வேண்டும். இந்த குடு வியாபாரத்தை நாங்கள் எமது நாட்டில் இருந்து இல்லாதொழிக்க வேண்டும். செய்யத் தேவையில்லையா?? இதற்காக தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் நாங்கள் குடு வியாபாரிகளுக்கு கடனும் இல்லை பயமும் இல்லை. இந்த நாட்டை இவ்வாறு தான் கட்டி எழுப்ப வேண்டும்.

இதற்காகத்தான் நாங்கள் அதிகாரத்தை கேட்கின்றோம். எங்களுடைய நாட்டிலே பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். இவர்கள் ஒருபோதும் எங்களுடைய நாட்டிலே உற்பத்தியை அதிகரிக்கவில்லை. அவர்கள் கொண்டுவந்து விற்பதற்குத்தான் விருப்பமாக இருக்கின்றார்கள். என்ன அவர்கள் கொண்டு வராமல் இருக்கின்றார்கள். எங்களுடைய மாத்திரைகளைப் பார்த்தால் அது இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்படுகிறது.

ஆடைகள் அங்கிருந்துதான் கொண்டுவரப்படுகின்றது. முட்டைகள் கொண்டு வரப்படுகிறது. அதேபோன்றுதான் வெங்காயம். விதைகளைக் கொண்டு வருகிறார்கள். என்ன ஆட்சியாளர்கள் இவர்கள்..? வெங்காயம் கொண்டு வருவதும் அங்கிருந்துதான். கருவாடு கொண்டு வருகிறார்கள் மாலையில் இருந்து. அதேபோன்று கௌபி, உளுந்து, பயந்து எடுத்து வருகிறார்கள். இவர்கள் நாட்டை கட்டி எழுப்பவில்லை. அவர்கள் விருப்பம் எதற்கு என்றால் வெளிநாடுகளில் இருந்து ஏனென்றால், இறக்குமதி செய்தால் அவர்களுக்கு கொமிஷன் வரும். ஒரு முட்டை இந்தியாவிலிருந்து வருவதற்கு கொமிஷன் எவ்வளவு என்றால், எட்டு ரூபாய் . ஒரு கோடி முட்டை கொண்டு வந்தால் இலாபம் எட்டுக் கோடியாக இருக்கின்றது. நல்லது என்றால் நாட்டுக்கு நல்லது. இவ்வாறு நாங்கள் உற்பத்தி செய்தால் நாட்டுக்கு நல்லது. இறக்குமதி செய்தால் அமைச்சருக்கு நல்லது அப்படித்தானே! அதேபோன்றுதான் மாத்திரைகள் இறக்குமதி செய்யும்போது களவெடுக்கிறார். கீழ்த்தரமான மாத்திரைகளைக் கொண்டு வருகிறார்கள். அதனை இறக்குமதி செய்யும் போது அமைச்சருக்கு இதை உற்பத்தி செய்தால் நாட்டுக்கு நல்லம். சீனியை இறக்குமதி செய்கின்ற போது 1500 கோடி இவர்கள் அடித்தார்கள். அதை இறக்குமதி செய்தால் அமைச்சருக்கு நல்லது. இதனை உற்பத்தி செய்தால் மக்களுக்கு நல்லது.

ஆகையினால், என்ன செய்ய வேண்டும். உற்பத்தி செய்யக்கூடிய. தயாரிக்கக்கூடிய எல்லாவற்றையும் மீண்டும் இலங்கையிலே

நாங்கள் ஆரம்பிக்க வேண்டும். நாட்டைப்போன்று எட்டு மடங்கு கடலில் இருக்கின்றது. அதில் அதிகளமான மீன்கள் இருக்கின்றது. இதனை பிடிப்பதற்காக நாங்கள் முயற்சிகளை வேண்டும்.

இப்போது இருக்கின்ற பெட்ரோலுடைய விலையில் எரிபொருள் அடித்துக்கொண்டு உணவையும் எடுத்துக்கொண்டு அங்கே நிற்பது மிகவும் குறைவு. ஏனென்றால், கடலில் சென்று 40 நாட்கள் இருந்து வந்தால் நஷ்டம் அதற்காக நாங்கள் எரிபொருள் நிவாரணம் ஒன்றை வழங்க இருக்கின்றோம்.

கரையில் இருக்கின்ற சகல படகுகளும் அங்கு சென்று மீன் பிடிப்பதற்காக நாங்கள் எரிபொருளை வழங்குவோம். இங்கே படகுகள் கரையிலிருந்து வேலையில்லை. ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரம் படகுகள் கரையிலே; கருவாடு மாலைதீவில் இருந்து.

எங்களுடைய மீனுக்கு வாக்குகள் இருந்தாலும் ரணில் இடம் கொடுக்காது. ஆகையினால், இதற்காக நாங்கள் உங்களுக்கு நிவாரணம் வழங்குவோம் நீங்கள் சென்று மீன் பிடிப்பதற்காக. நான் பலமுறை இங்கு வந்து பார்த்திருக்கிறேன். கடல் அடித்துக் கொண்டு கரைக்கு வருகின்றது. ஏராளமான கட்டிடங்கள், தென்னந் தோட்டங்கள் எல்லாம். அதற்காக எங்களது கரையோரத்தை பாதுகாப்பதற்காக இதற்கான திட்டங்களை ஆரம்பத்திலேயே எடுக்க வேண்டும். அதே போன்றுதான் கப்பலை கொண்டு வருவதற்காக துறைமுகம் ஒன்றைக் கட்டினார்கள். அதில் மீன்பிடி படகு கூட செல்ல முடியாது. இவ்வாறு அனைத்தையும் நாங்கள் மாற்றீடு செய்ய வேண்டி இருக்கின்றது. இந்தப் பக்கத்திலே வாழுகின்ற மீனவ மக்களுக்காக, அவர்களுக்கு வசதி ஏற்படுத்துவோம். அதே போன்றுதான், விவசாயிகளுக்கு நீங்கள் விவசாயத்தை ஆரம்பியுங்கள். எந்தவொரு வயலையும் நீங்கள் சும்மா விட வேண்டாம். இதற்காக அரசாங்கம் உங்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும். எங்களுடைய சுற்றுலாத்துறைக்கு தேவைப்படுகின்ற அரிசியைத் தவிர வேறு எந்த அரசியையும் நாங்கள் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வர மாட்டோம்.

ஆகையினால், என்ன செய்ய வேண்டும். இந்த நாட்டைக் கட்டி எழுப்ப நாங்கள் அனைவரும் ஒன்று சேர்வோம்.

இந்த செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பிப்பது ஒரு தலைவரை இல்லாமலாக்கி இன்னொரு தலைவரை கொண்டு வருவதற்காக அல்ல; ஓர் அரசாங்கத்தை இல்லாமல் செய்து இன்னொரு அரசாங்கத்தைக் கொண்டு வருவதற்காக அல்ல. இந்த நாட்டை வீழ்ச்சி அடையச் செய்த குழுவை இல்லாமல் ஆக்க வேண்டும். இந்த நாட்டைக் கட்டி எழுப்பக் கூடிய குழுவுக்கு அனைவரும் சேர்ந்து எங்களது நாட்டை கட்டி எழுப்புவோம். இங்கு இருக்கின்ற சிறுபிள்ளைகள் அந்தப் பிள்ளையை விட்டு விட்டு அந்த இளைஞர் வெளிநாடு தொழிலைத் தேடுவதற்காக வெளிநாடு செல்கிறார். அல்லது அவ்வாறு இல்லாமல் அதுவும் மாறி நடக்கின்றது. அந்தப் பிள்ளை வெளிநாடு செல்கின்றது. என்ன நடக்கின்றது. அதாவது ஒரு நாட்டை வைத்திருக்கின்றார்கள். அது தொழிலைத் தேட முடியாத நாடாக இருக்கின்றது. அதேபோன்றுதான் பிள்ளைகளுக்கு கல்வி இல்லாத நாடாக இருக்கின்றது.

இந்த நாட்டை முழுவதுமாக இந்த ஆட்சியாளர்கள்தான் நாசமாக்கினார்கள். ஆகையினால், இப்போதாவது நாங்கள் இதனைக் கட்டி எழுப்ப வேண்டும்.

எனவே, செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி தேசிய மக்கள் கட்சியை வெற்றி பெறச் செய்வோம். நாட்டைக் கட்டி எழுப்பக்கூடிய அரசாங்கத்தை உருவாக்குவோம். திருட்டை இல்லாமல் செய்கின்ற அரசாங்கத்தை உருவாக்குவோம். தேவையில்லையா அப்படி? களவெடுத்தவர்களுக்கு தண்டனை வழங்கக் கூடிய ஓர் அரசாங்கத்தை, அதேபோன்று களவெடுத்த சொத்துக்களை மீண்டும் எடுத்துக் கொள்ளக் கூடிய ஓர் அரசாங்கத்தை அவ்வாறானதொரு அரசாங்கத்தை நாங்கள் உருவாக்க வேண்டும். நீங்கள் பின்பற்றுகின்ற மதத்தின் பிரகாரம் உங்களுக்கு இந்த திருட்டை இல்லாமல் செய்யாது போனால் அல்லது அதனை நீங்கள் நிற்பாட்டுவதற்கு உதவி செய்தால், உங்களால் ஊழல் செய்த ஒருவரை நிறுத்த முடியுமா? உங்களுக்கு முடியுமா? மத்திய வங்கியில் செய்த அந்த ஊழலை நிறுத்த முடியுமா? அதேபோன்றுதான் உங்களால் முடியுமா? ஆகையினால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்? திருட்டை இல்லாமல் செய்கின்ற குழுவிற்கு வழங்க வேண்டும். அவர்கள் களவெடுத்தவர்கள். நாங்கள் களவை நிறுத்த வருகின்றோம். அவர்களுக்கு வாக்களிப்பதென்பது திருட்டுக்கு நாங்கள் ஒத்துழைப்பதாகும்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதென்பது திருட்டை நிறுத்துவதற்காக அளிக்கின்ற ஒத்துழைப்பாக இருக்கும்.

ஆகையினால், யாருக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும்? தேசிய மக்கள் சக்திக்கு! ஆம்! அதற்காக நாங்கள் அனைவரும் ஒன்று சேர்வோம். அதற்காக நாங்கள் அனைவரும் வேலை செய்வோம்.

செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நாங்கள் நல்லதொரு முடிவை எடுப்போம். அதற்காக அனைவரும் ஒன்று சேருங்கள். அனைவருக்கும் வாழ்த்துக்கள்! என்றும் தெரிவித்தார்,

# நானுஓயாவில் சொகுசு கார் விபத்து

## ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி







**செ.திவாகரன், வி.தீபன்ராஜ் நிருபர்கள்**

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில், நானு ஓயா - வெண்டிகோனர் பகுதியில் (16) பிற்பகல் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து அதிசொகுசு காரொன்று வீதியோரத்தில் உள்ள கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் 34 வயதுடைய காரின் சாரதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் , நுவரெலியாவில் இயங்கும் தனியார் வைத்தியசாலையில் விசேட வைத்தியர் ஒருவருக்கு சொந்தமான அதிசொகுசு காரே இவ்வாறு விபத்துக்குள்ளானது என நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பில் இருந்து நுவரெலியா நோக்கி சென்ற சொகுசு கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதான வீதியில் வேகமாக சென்ற காரின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் அல்லது சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதால், விபத்து ஏற்பட்டிருக்கலாம் என விசாரணை நடத்தி வரும் நானுஓயா பொலிஸார் கூறியுள்ளனர்.


சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


முனைப்பு நடாத்தும்
கதம்பமாலை
MUNAIPPU
2024
14 வது ஆண்டில்
காலம் : 22.09.2024
நேரம் : மாலை மதியம் 02.00 மணி
இடம் : Pfarrei St. Karl
Spital Strasse 93, 6004 Luzern
தொடர்புகளுக்கு : 079 775 43 69
078 626 43 75 / 079 295 99 46
munaippu@gmail.com
www.munaippuswiss.com
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுமதி இலவசம்
உணரும் உதவி உயரியது
Sikaram
Y.RAJ GOLDSCHMUCK


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Sikaram INTL GmbH
Heinrich Strasse 120,
8005 Zürich
Tel : 044 2410241
H.P : 077 944 2877


SWISS இல்
புதிய வீடு கட்ட
041 790 64 63
079 514 64 28
www.shelvazug.com
shelvazuggmb@gmail.com
வீடு வாங்க
வீடு கட்ட
வீடு விற்க்க
வீடு திருத்த


ellaalan fleisch
GEFLÜGEL • FLEISCH • TIEFKÜHLPRODUKTE
RAJATHURAI .K
Geschäftsführer
www.ellaalan.com
Ellaalanfleisch


Aadaa Finance GmbH
Hauptstrasse 54, 6015 Luzern Switzerland
Zert. Versicherung & Vorsorge Berater
finma : 34598


SOPI
Dhivo


S TRAVEL
Flugtickets | Hotels | Reisevorsehcerungen
044 419 91 00

